**செம்பாக்கம் நகராட்சியில் 25.2.2021ம் நாள் வியாழக்கிழமை மாலை 5.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைப்பெற்ற சாதாரணக்கூட்டத்தின் நடவடிக்கைகளின் நகல்.**

**கலந்துக்கொண்ட தனி அலுவலர் பெயர் மற்றும் பதவி: திரு. பெர்பெற்றி டெரன்ஸ் லியோன்,**
**தனி அலுவலர் / ஆணையாளர்**
**செம்பாக்கம் நகராட்சி**

**பொருள் எண்.1**

செம்பாக்கம் நகராட்சி ஆணையர் அவர்களின் பிப்ரவரி **2021** மாதத்திய நாட்குறிப்பேட்டினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.782 பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.2**

செம்பாக்கம் நகராட்சியின் 2020-21ம் ஆண்டிற்காக திருத்திய வரவு செலவு அறிக்கை மற்றும் 2021–22ம் நிதியாண்டிற்கான நிதி நிலை திட்ட அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** வரவு செலவு திட்ட அறிக்கைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.783 ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

செம்பாக்கம் நகராட்சியில் 2021–22ம் நிதியாண்டிற்கு பொது நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்வதற்காக 25.2.2021 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | செம்பாக்கம் நகராட்சியின் பராமரிப்பில் உள்ள பூங்காக்களை பராமரிப்பு பணிக்காக தேவைப்படும் பணியாட்களை சப்ளை செய்தல் பணி | 9.80 | எஸ்.ஆர். மேன்பவர் கன்சல்டன்சி | மதிப்பீட்டை விட 0.20% குறைவு |
| | | | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 1.80% அதிகம் |
| 2 | வார்டு எண்.4ல் சாய் பாபா கோவில் தெருவில் உள்ள பொது கிணறு கிரில் அமைத்தல், வார்டு எணண.5 குடிசை மாற்று வாரியம் பகுதியில் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் | 3.20 | அருணாச்சலம் இன்பிராஸ்ட்ரக்ஷர் டெவலப்மன்ட் | மதிப்பீட்டை விட 0.20% குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | பணி வார்டு எண்.10 வினை தீர்த்த வினாயகர் கோயில் தெருவின் நுழைவாயிலில் உடைந்துள்ள மழைநீர் வடிகால்வாயினை சீரமைத்தல், வார்டு எண்.12, விவேகானந்தர் தெரு சிறுபாலம் பழுது பார்த்தல் பணி | | எல். கிஷோர் குமார் | மதிப்பீட்டை விட 1.20% அதிகம் |
| 3 | வார்டு எண்.14 ஐய்யபா நகர் மெயின் ரோடு மழைநீர் வடிகால்வாய் உயர்த்தி அமைத்தல் பணி | 1.70 | எம். ஞானவேல் | மதிப்பீட்டை விட 0.10% குறைவு |
| | | | எம். சக்திவேல் | மதிப்பீட்டை விட 0.50% அதிகம் |
| 4 | வார்டு 1 முதல் 15 வரை குடிநீர் பகிர்மான குழாய் விடுப்பட்ட தெருக்களில் பகிர்மான குழாய் பதித்தல் பணி | 9.80 | ராஜலட்சுமி காண்ட்ராக்ட்ஸ் | மதிப்பீட்டை விட 0.10% குறைவு |
| | | | எஸ்.வி.பி. எலக்ட்ரிகல்ஸ் | மதிப்பீட்டை விட 1.50% அதிகம் |
| 5 | வேளச்சேரி மெயின் ரோடு காமராஜபுரம் மெயின் ரோடு சந்திப்பு பகுதியில் கழிவுநீர் வெளியேற்ற குழாய் பதித்தல் பணி | 2.20 | கே. ராமதாஸ் | மதிப்பீட்டை விட 0.25% குறைவு |
| | | | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 1.80% அதிகம் |

**அலுவலக குறிப்பு:** பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் மற்றும் நிறுவனங்களுக்கு மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.784** **அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

பொருள் எண்.4

செம்பாக்கம் நகராட்சி 2019–20ம் ஆண்டு தணிக்கையில் பத்தி எண்.54ல் கீழ்காணும் விவரப்படி 31.03.2020ன் விவரப்படி வைப்பு தொகை இருப்பு பதிவேட்டில் காலகடந்த வைப்பு தொகைகள் மன்ற அனுமதி பெறப்படாமல் தொகை ஈடு செய்தமைக்கு மன்றத்தின் அனுமதி பெற்று தணிக்கையில் சமர்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | வரவின நாள் | GJV எண் மற்றும் நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | கலை எலக்ட்ரிகல்ஸ் | 21.02.2013 | 669/28.01.2020 | 100 |
| 2 | கிஷோர்குமார் (2012-13) | 27.09.2013 | 702/06.03.2020 | 1960 |
| 3 | கெஜேந்திர பாபு (2013-14) | 12.12.2013 | 670/28.01.2020 | 1000 |
| 4 | சோகன் போர்வெல் (2014–15) | 23.06.2014 | 702/06.03.2020 | 1960 |
| 5 | ஸ்ரீநயகார பவர் சேவர்(2014–15) | 17.10.2014 | 392/23.01.2019 | 2500 |
| 6 | ஸ்ரீ கிருஷ்ணா பிரிண்டர்ஸ் (2015-16) | 24.02.2015 | 391/14.06.2019 | 1100 |
| 7 | ஸ்ரீ கிருஷ்ணா பிரிண்டர்ஸ் (2015-16) | 22.02.2016 | 392/23.04.2019 | 2000 |
| | | | மொத்தம் | 10620 |

**அலுவலக குறிப்பு:** காலங்கடந்த வைப்பு தொகை கணக்கிலிருந்து மேற்கண்ட தொகை ரூ.10620/—ஐ நகராட்சியின் இதர வருவாய் கணக்கிற்கு மாற்றம் செய்து ஈடு செய்தமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.785** **அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.5**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை 5 அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.13052/2016/டி2 நாள் 11.7.2017ல் உள்ளாட்சிகளில் முன்பண தலைப்பில் 2006க்கு முந்தைய காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பணிகளில் பயன்படுத்தப்படும் (சிமெண்ட் / தார் / ஸ்டீல்) மற்றும் இதர தளவாடங்கள் கொள்முதல் செய்வதற்காக அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட முன்பண தொகைக்கு ஏற்ப தொடர்புடைய நிறுவனங்களிடமிருந்து தளவாடங்கள் பெறப்பட்ட பின்னரும் வழங்கப்பட்ட முன்பணத் தொகையினை கணக்கில் ஈடு செய்யாமல் நீண்ட காலமாக முன்பண தலைப்பில் நிலுவையாக வைத்து பராமரிக்கப்பட்டு வருவதை உறுதி செய்து அவற்றை ஈடு செய்ய நகர் மன்றத்தில் பொருள் வரைவு வைத்து ஈடு செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில், இந்நகராட்சியில் 2005—2006ம் ஆண்டில் முன்பண தலைப்பின் கீழ் கணக்கு தலைப்பு எண்.4604001 திட்ட / பொது நிதி தார் சாலை பணிகளுக்காக இந்தியன் ஆயில் நிறுவனத்திடமிருந்து தார் கொள்முதல் செய்வதற்காக ரூ.722885/— மற்றும் கணக்கு தலைப்பு எண்.4314037 இதர தளவாட பொருட்கள் சப்ளை செய்வதற்காக ரூ.15867.50/— வழங்கப்பட்டுள்ளது. இத்தொகைக்கான தளவாட பொருட்கள் தொடர்புடைய நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற நிலையில் முன்பண கணக்கில் ஈடு செய்யப்படாமல் நீண்ட கால நிலுவையாக உள்ளதை ஈடு செய்துக் கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 2006ம் ஆண்டிற்கு முந்தைய நீண்ட கால நிலுவைத் தொகையினை ஈடு செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.786** **அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.6**

செம்பாக்கம் நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டம் இரண்டாம் நிலை குப்பை சேகரிக்கும் பணிக்காக பயன்பாட்டில் உள்ள லாரி வாகனம் TN22 AZ1346 பழுதடைந்துள்ளது. மேலும், அன்றாடம் பயன்பாட்டில் உள்ள ஜெசிபி இயந்திரத்திலும் பதிவு எண். TN11 P7516 பழுது ஏற்பட்டு, இவ்விருவாகனங்களும் இயக்க முடியாமல் உள்ளது. மேற்படி வாகனங்களில் ஏற்பட்டுள்ள பழுது பணிகளை மேற்கொள்ள வேண்டி அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையில் பழுது விவரங்களும், அதற்கான தோராய செலவினமும் கோரப்பட்டது. அதன் அடிப்படையில் தொழில் நுட்ப பணியாளரை கொண்டு ஆய்வு செய்த வகையில், வாகனங்களில் கீழ்காணும் அத்தியாவசிய பணிகள் மேற்கொள்ள வேண்டும் எனவும், இதற்கான தோராய செலவினமும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வாகன பதிவு எண் | மேற்கொள்ள வேண்டிய அத்தியாவசிய பரமரிப்பு பணிகள் | தோராய செலவினம் (ரூ.) |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 1 | TN22 AZ1346 | Providing Complete Repair Works to Public Health Vehicle Lorry<br>1. Brake OH<br>2. Water Pump Assembly<br>3. Dynamo OH<br>4. Joint OH<br>5. Radiator Assy Renewal | 55200 |
| 2 | TN11 P7516 | Providing Complete Repair Works to Public Health Vehicle JCB<br>1. Brake Cylinder Assy Renewal 2 No<br>2. Self Motor OH<br>3. Dynamo OH<br>4. Clutch OH<br>5. Charge Pump Assy Renewal | 83000 |
| | | Total | 138200 |

மேலும், 2020–21ம் ஆண்டு கனரக வாகன ஆண்டு பராமரிப்பு செலவினங்களுக்காக இந்நகர் மன்ற தீர்மானம் எண்.621 நாள் 28.2.2020ன் படி ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பழுது பணிகள் மேற்கொள்ளப்பட்டது. ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் நாளது தேதியில் ரூ.500/– மட்டுமே நிதியிருப்பு உள்ளது. இந்நிலையில் இப்பழுது பணிகளை மேற்கொள்ள ஆகும் செலவினத் தொகை ரூ.138200/– ஆகும். நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும், ஏற்கனவே கனரக வாகன பராமரிப்பின் கீழ் 2020–21ம் ஆண்டு ஒப்பந்தப்புள்ளியில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான மெஸ்லர்ஸ் எம்.கே.எஸ். மோட்டார்ஸ் நிறுவனத்திடம் இவ்விரு வாகனங்களை ஒப்படைப்பு செய்து பணியினை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. வாகன பராமரிப்பிற்கான கூடுதல் செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. திடக்கழிவு மேலாண்மை பணிகள் தொய்வின்றி மேற்கொள்ளவும், அவசர அவசியம் கருதி இவ்விரு கனரக வாகனங்களின் பராமரிப்பு பணிகளை மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.787 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

பொருள் எண்.7

செம்பாக்கம் நகராட்சிக்கு சொந்தமான போலிரோ வாகனம் எண். TN 11 AK 6142ல் ரேடியேட்டர் பழுது பணி மேற்கொள்ள தயாரிப்பு நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட இந்தியா கேரேஜ் நிறுவனத்திடம் வாகனத்தை ஒப்படைத்து பணி செய்து முடிக்கவும், அதற்கான தோராய மதிப்பீட்டு தொகை ரூ.11000/–க்கு மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.788 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.8**

**2021–22**ம் ஆண்டிற்கு இந்நகராட்சி பணியாளர்களுக்கு பண்டிகை முன்பணங்கள் மற்றும் இதர முன்பணங்கள் வழங்குவதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.**5.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.789 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.9**

**2021-22**ம் ஆண்டிற்கு நகராட்சி பணியாளர்கள் அலுவலக பணிக்காக பயணம் செய்ய பயணப்படிகள் வழங்கவும், பணியாளர்கள் பணி மாறுதலில் இடமாற்ற பயணப்படி வழங்கவும் மற்றும் பயிற்சிக்காக செல்லும் போது வழங்க வேண்டிய பயணப்படி வழங்கவும் மற்றும் பிற பயணப்படிகள் வழங்க ரூ.**200000/-** க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.790 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.10**

செம்பாக்கம் நகராட்சி மீது தொடரப்படும் வழக்குகள் தொடர்பாக இந்நகராட்சி சார்பில் ஆஜராகும் மாவட்ட நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்களுக்கு வழங்க வேண்டிய வழக்கு கட்டணம் **2021-22**ம் ஆண்டிற்கு தோராய செலவினம் ரூ.**3,00,000/-** மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.791 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.11**

செம்பாக்கம் நகராட்சியில் பொது பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும் ஆண்டு பராமரிப்பு பணிகளின் ஒப்பந்த காலம் **31.3.2021**ம் தேதியுடன் முடிவடைவதால், **2021–2021**-ம் நிதியாண்டில் கீழ்கண்ட பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1 | அலுவலக பயன்பாட்டுக்கு தேவையான படிவங்கள் பதிவேடுகள் அச்சடித்து வழங்குதல் மற்றும் எழுது பொருட்கள் சப்ளை செய்தல் பணி | ரூ.500000 |

**அலுவலக குறிப்பு:** 1. மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.மேற்கண்ட செலவினத்தை **2021–22**ம் நிதியாண்டில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.792 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.12**

செம்பாக்கம் நகராட்சியின் மூலம் மத்திய மற்றும் மாநில அரசு துறைகளுக்கு செலுத்தப்பட வேண்டிய வருமான வரி, சரக்கு மற்றும் சேவை வரி மற்றும் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி ஆகிய தலைப்புகளுக்கு வலைதளத்தில் முறையே மாதாந்திர கணக்கு தாக்கல் செய்தல் பணியினை கலந்தாலோசகர் மூலம் செய்யவும், இதற்கான தோராய செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | விவரம் | தொகை |
|---|---|---|
| 1 | வருமான வரி | 70000 |
| 2 | சரக்கு மற்றும் சேவை வரி | 70000 |
| 3 | தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி | 40000 |

**அலுவலக குறிப்பு:** 2021–22ம் நிதியாண்டில் நகராட்சியின் வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.793 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.13**

செம்பாக்கம் நகராட்சியில் அலுவலக பயன்பாட்டுக்கு தேவையான படிவங்கள் பதிவேடுகள் அச்சடித்து வழங்குதல் மற்றும் எழுது பொருட்கள் சப்ளை செய்தல் பணிக்காக ரூ.5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து இந்நகர் மன்ற தீர்மானம் எண்.629 நாள் 28.2.2020ல் ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரி கொள்முதல் செய்யப்பட்டது.

இந்நிலையில் தற்போது தேவைப்படும் எழுதுப்பொருட்களை அவசர அவசியம் கருதி அதே ஒப்பந்ததாரர் மூலம் ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்ட விலை விகித அடிப்படையில் கூடுதலாக எழுது பொருட்கள் கொள்முதல் செய்யவும், அதற்கான செலவினத் தொகை ரூ.1.20 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** கூடுதல் செலவினத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.794 அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்.14**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் குடிநீர் பராமரிப்பு பணிகள் ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் போது மாற்றப்பட்ட பழைய அல்லது பழுதடைந்த பொருட்களை 2017–18 முதல் 2019–20 வரையான மூன்றாண்டுகளுக்கு நகராட்சியில் இருப்பு பதிவேட்டில் பதியப்பட்டு வருகிறது. இவை அனைத்தும் மிகவும் பழுதடைந்து, பயனற்று துருப்பிடித்த நிலையிலும் உள்ளதால், இது குறித்து தணிக்கையில் மேற்கண்ட மூன்றாண்டுகளில் தணிக்கை குறிப்பில் தடை எழுப்பப்பட்டுள்ளதாலும், இவற்றினை ஏலம் விடுவதால் நகராட்சிக்கு வருவாய் ஏற்படும். எனவே, பகிரங்க பொது ஏலம் விட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** ஏலம் விட மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.795** **அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

பொருள் எண்.15

தமிழக அரசு மூலம் கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைகளின் கீழ் **144** தடை உத்திரவி பிறப்பிக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளதால், அவசர அவசியம் கருதி இந்நகராட்சியில் **1920**ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு **15**ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரம் மற்றும் செலவினத் தொகை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | கொரோனா நோய் தொற்று கணக்கெடுப்பு படிவங்கள் மற்றும் அபராத தொகை வசூலிக்கும் இரசீது புத்தகங்கள் அச்சடித்து சப்ளை செய்த ஸ்ரீ கிருஷ்ணா பிரிண்டர்ஸ்க்கு பட்டியல் தொகை வழங்கியது. | 16200 |

**அலுவலக குறிப்பு:** அவசர அவசியம் கருதி **1920**ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு **15**ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களுக்கு மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.796** **செலவினங்கள் பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

தனி அலுவலர்
செம்பாக்கம் நகராட்சி